தினபூமி 14 AUG 2002

# வனவளத்தை பாதுகாக்க மக்களிடையே விழிப்புணர்வு தேவை

## ஊட்டி கருத்தரங்கில் வலியுறுத்தல்

ஊட்டி, ஆக.14-

வனவளத்தை பாதுகாக்க மக்களிடையே நல்ல விழிப்புணர்வு தேவை என்று ஊட்டியில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

இயற்கை காடுகளையும், வனவளத்தையும் பாதுகாப்பது குறித்தும், வனவளத்தை பேணிக் காப்பதில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்துவது குறித்தும், மரக்கட்டைகள் இல்லாத இதர வன உற்பத்தி பொருட்கள் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு ஊட்டியில் நடைபெற்றது. இதில் இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, வியாட்நாம் நாடுகளை சேர்ந்த நிபுணர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கில் இறுதி நாள் நிகழ்ச்சியில் டேன்டீ நிறுவனத்தின் இயக்குனர் சித்தரப்பு பேசுகையில், தமிழ்நாட்டில் வனவளத்தை பாதுகாக்க கடந்த 1977-ம் ஆண்டு வாக்கில் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர்., அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு வனச்சட்டங்களை உருவாக்கி, வனப்பாதுகாப்புக்கு வித்திட்டார் என்றும், வனவளத்தை பேணி காத்து, அதிகரிப்பதின் மூலமே மனித குலம் நிலையான வளர்ச்சி பெற ஏதுவாக இருக்கும் என்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட கலெக்டர் சுப்ரியா சஹூ கலந்து கொண்டு பேசும் போது கூறியதாவது:- 'நீலகிரி மாவட்டத்தில் வனவளத்தை பாதுகாக்க பல்வேறு திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. வனப்பகுதிகளில் அதிகம் வசிக்கும் ஆதிவாசி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்களில் சேவை நிறுவனங்களின் பங்கு நல்ல முறையில் உள்ளது. வனவளத்தை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை அனைத்து தரப்பு மக்களிடையேயும் உருவாக்க வேண்டும்.

நாட்டிலேயே முதன்முறையாக செயற்கைகோள் ரிமோட் சென்சிங் முறை மூலம் நீலகிரி மாவட்டத்தின் வனவளம், நிலம் மற்றும் நீர் வளங்கள் குறித்து விபரங்கள் பெறப்பட்டு, அதனடிப்படையில் மேம்பாடு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக, மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.5 கோடி வரை நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

கால்நடைகள் மேய்ச்சல், விறகுக்காக மரங்களை வெட்டுதல் போன்றவற்றால் காடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இதை தடுக்க, காட்டு பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசி மக்களுக்கு இதர வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதே சமயம் ஆதிவாசி மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்று அவர் பேசும் போது கூறினார்.